1973 மார்ச் 27]

விளக்கங்கள் கொடுத்து, அதைக் கட்டுவதற்கு உற்சாகப் படுத்துகிருர்களே, அதற்கு அரசு என்ன செய்ய உத்தேசித் திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: இப்போது நடை பாதைக் கோவில்கள் மாத்திரமல்ல, கொடிகளை நாட்டு வதற்காகவும் ஆங்காங்கு சில பீடங்கள் அமைத்து அந்தக் காரியமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கட்சிகள் கொடி மரங்கள் அமைப்பதும், பீடங்கள் அமைப்பதும் உள்ளபடியே போக்குவரத்துக்கு இடைஞ்சலாக நடைபாதைகளில் இருக் கின்றன. ஆகவே எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து—இந்த ஒரு விஷயத்திலாவது எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து அவற்றை அகற்றுவதில் ஆர்வம் காட்டவேண்டும். தனித்தனியாக பீடங்கள் அமைக்கக்கூடாது என்பதில் எல்லோரும் ஈடுபட்டால் அரசு நிச்சயமாக ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

இராமநாதபுரம் மாவட்டம் வறட்சிப் பகுதிகளில் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளிவைத்தல் குறித்து.

திரு. கு. ஆண்டி என்ற குருசாமி: துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாக திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் வறட்சிநிலை காரணமாக விவசாயிகள் தங்கள் கடன்களைத் திருப்பித்தர மிகவும் அவதிப்படும் நிலையில் அவர் களுக்குக் கூட்டுறவுத்துறை மூலம் வழங்கப்பட்ட கடன்களை வசூலிப்பதை தள்ளிவைக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்ட உடனேயே எந்தெந்தப்

பகுதிகளில் விளைச்சல் ஆறு அணுவுக்கு குறைவு என்று அனுவரி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதோ அந்தப் பகுதிகளில் உள்ள விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளி வைக்க மனுக்களை வாங்கி அனுப்புமாறு இராமநாதபுரம் மத்திய வங்கி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டத்தில் நான்கு கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய காலக் கடன்களை மத்திய கடன்களாக மாற்றுவதற்கு கேட்டுக்கொண்டதற்கிணங்க ரூ. 39,548 வழங்கப்பட்டது.

மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்டு ஆனல் விளைச்சல் ஆறு அணுவுக்குக் குறைவு என்ற அனுவாரி சான்றிதழ் வழங்கப்படாத பகுதிகளிலும் கடன் வசூலிப்பதில் கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என்று அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள். இந்த அறிவுரைகள் 30—6—1973 வரை அமலில் இருக்கும்.

திரு. கு. ஆண்டி என்ற குருசாமி : கூட்டுறவு முறையில் கொடுக்கப்பட்ட கடன்களைக் கெடுபிடியாக வசூல் செய்கிறார்கள். அப்படிக் கெடுபிடியாக வசூல் செய்யப்படுவது தடுத்து நிறுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : எல்லா ஊர்களிலும் கெடுபிடி நடவடிக்கைகள் 30—6—1973 வரை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

3. தகவல் கோரல்.

அவை அலுவல் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : Today is the last day for the Demands and you will be guillotining all the Demands which are not voted at 1 O' clock. What I suggest is, there may be some change in the order of business. This resolution may be taken up at 1 O' clock. The Demand on Jails which was to have been taken up on the 22nd is just coming up today and there is a danger of that Demand being guillotined also. So, priority may be arranged in such a way that the Demand which was to have been taken on the 22nd may be taken up first and the other things next in order. After 1 O' clock this Resolution may be taken up.